02-11-2012 Dinamalar

### மெட்ரோ ரயில் திட்டம்

# குஜராத்தில் இருந்து 'டிரான்ஸ்பார்மர்' வருகை

சென்னை, நவ. 2-

மெட்ரோ ரயில் திட்டத்திற்காக, குஜராத்தில் இருந்து மின்மாற்றிகள், சென்னைக்கு கொண்டு வரப்பட்டு உள்ளன.

மெட்ரோ ரயில் திட்ட மின்சார தேவைக்காக, துணை மின் நிலையங்கள் அமைக்க, சீமென்ஸ் நிறுவனத்துடன், 305 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போடப்பட்டு உள்ளது. கோயம்பேடு, ஆலந்துார் மற்றும் சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையங்களில், மின் நிலையங்கள் அமைகின்றன.

கோயம்பேட்டில், கடந்த மே மாதம், இப்பணி துவங்கியது. ஆலந்துாரில், ஜூனில் இருந்து, பணி நடக்கிறது.

இந்த இரு நிலையங்களுக்கும், குஜராத் மாநிலத்தில் இருந்து, 230 கே.வி., திறன் கொண்ட, இரண்டு மின்மாற்றிகள் வாங்கப்பட்டு உள்ளன.

இவை, நேற்று முன்தினம், சென்னைக்கு கொண்டு வரப்பட்டு, இரு நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதுகுறித்து, ஒப்பந்த நிறுவன அதிகாரி கூறியதாவது:

துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளை, 2013, மார்ச் மாதத்திற்குள் முடிக்க, திட்டமிடப்பட்டு உள்ளது. சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலைய கட்டுமானப் பணிகள், 75 சதவீதம் முடிந்த பின், துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

துணை மின் நிலையங்கள் மூலம், மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தேவையான மின்சார வசதிகள், செய்து கொடுக்கப்படும்.

இவ்வாறு, அதிகாரி கூறினார்.



மெட்ரோ ரயில் திட்டத்திற்காக, குஜராத்திலிருந்து கொண்டு வரப்பட்ட, மின் மாற்றிகளில் ஒன்று.